இருக்கின்றன; சில இடங்கள் சொந்தமாக இல்லை. மேலும் அரசுக்குச் சொந்தமான நிலங்களை பட்டா செய்து கொடுப்பதை விட, 'ஸ்லம் போர்டு' மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து விடலாம் என்று இருப்பதால், இப்போது பட்டா செய்து கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: துணைத் தலைவரவர்களே, சில இடங்களில் அரிசனங்கள் குடியிருப்புக்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று சொல்லி கிட்டத்தட்ட 5, 6 ஆண்டுகள் ஆகியும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடு கட்டப்படவில்லை. காரணம் கேட்டால், கீழே இருந்து மேலேயும், மேலே இருந்து கீழேயும் எழுதிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. எனவே, அதில் துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் முதலிலேயே கூறினேன். தனிப்பட்டவர்கள் நிலத்தை எடுக்கும்போது நிலச் சொந்தக்காரர் கொடுக்க மறுக்கிறார்கள். மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது. சில இடங்களில் அதிகாரிகள் நிலச் சொந்தக்காரர்களைச் சமாதானம் செய்து, இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக நிலம் கொடுங்கள் என்று சொல்லி பெற்றுக் கொள்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார்கள். அது சம்பந்தமாக தீர்ப்பு வழங்கப் படுவதில் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. வழக்கு மன்றத்தில் கால தாமதம் ஏற்படுவதால் இந்த மாதிரி வழக்குகளுக்கு ஒரு தனி நீதிபதியை நியமிப்பது பற்றி சட்டத் துறை பரிசீலனை செய்து வருகிறது. அந்தந்த வட்டாரங்களிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும் நிலச் சொந்தக்காரர்களை அணுகி சமாதானம் செய்து, அவர்கள் நிலத்தைக் கொடுக்க வழி செய்வார்களானால் தகராறு இல்லாமலேயே, நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே ஆர்டர்' வாங்காமல் இருந்தால், துரிதமாக நிலம் ஆர்ஜிதம் செய்து, வீடுகள் கட்டிக் கொடுக்கலாம்.

* 64 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரத்திலுள்ள வாமடம் வடவூர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைக்குரிய நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கை எப்போது மேற் கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1964-ஆம் ஆண்டு வாமடம் வடலூரிலுள்ள 100 அரிசனங்களுக்கு வீட்டுமனை வசதி அளிக்க அரசு ஆணை (நிலை) எண் 2753 (உள்துறை) நாள் 29-8-1964-ல் திருச்சி மாவட்டாட்சியருக்கு நில ஆர்சித கருத்துரு அனுப்புமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(இ) அவ்வாறே மாவட்டாட்சியர் 1966-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், இனம்பெரிய வடலூர் கிராமத்தில் 5-78 ஏக்கர் பரப்புள்ள இனம் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய கருத்து ஒன்று அரசுக்கு அனுப்பினர். நில ஆர்ஜித நடைமுறை விதிகளின்படி இனம் நிலங்களை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என அரசு சுட்டிக்காட்டியதாலும், கருத்துரு அனுப்பியபின் நில சொந்தக்காரர்கள் தேர்ந்தெடுத்த நிலங்களில் வீடுகள் கட்டியாதலும் திருச்சிராப்பள்ளி மாவட்டாட்சியர் பெரிய வடலூர் கிராமத்தில் வார்டு 3, பிளாக் 2-ல் 1.07 ஏக்கர் நன்செய் நிலமும், தென்னூர் கிராமத்தில் வார்டு 2, பிளாக் 39-ல் 4.72 ஏக்கர் நன்செய் நிலமும் ஆக மொத்தம் 5.78 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களைத் தேர்ந்தெடுத்து மாற்றுக் கருத்துரு அரசு ஒப்புதலுக்காக 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அனுப்பி வைத்தார். இந் நில ஆர்ஜித மொத்தச் செலவு 15 சத விதம் உபரித் தொகையுடன் சேர்த்து ரூ. 5,80,088 ஆகியதென்றும், இதில் ரூ. 40,000 மானியமாகவும் ரூ. 40,000 கடனாகவும் அரசு கொடுக்க அரசு ஆணை (வாலாயம்) எண் 222 (ச.ந. துறை) நாள் 13-2-1969-ல் ஒத்துக்கொண்டது என்றும் மாவட்டாட்சியர் கூறியுள்ளார். நில ஆர்ஜிதத்தின் மீது செலவான ரூ. 5,00,000-ஐ அரிசனங்கள் நபர் ஒருவருக்கு வரும் 5,000-த்தை கட்ட முடியுமா என அரசு வினவியதற்கு அறிக்கை இன்னும் மாவட்டாட்சியரிடமிருந்து கிடைக்கவில்லை. நில ஆர்ஜிதம் இந்த நிலையில் தேங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி நகரத்திலுள்ள வாமடம் வடலூர் மக்களுக்காக நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமாக அரசுக்கும் அந்தப் பகுதி மக்களுக்கும் இடையே கிட்டத்தட்ட 15 ஆண்டுக் காலமாகத் தொடர்பு இருந்து வருகிறது. அதற்காக மக்கள் ஒரு பகுதி பணத்தைக் கொடுப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது அதில் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுமக்கள் பணம் கொடுப்பதாக எழுதிக் கொடுத்திருக்கும் தகவல் இப்போதுதான் கனம் அங்கத்தினர் மூலமாக எனக்குத் தெரிய வருகிறது. மேலும் அவர்கள் மாவட்ட ஆட்சியாளரை அணுகி அந்தத் திட்டத்தை விரைவிலேயே சர்க்காருக்கு அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.